# மேல்நிலைக் கல்வித் தேர்வு வினாத்தாள்
# தமிழ் (304)

காலம் : 3 மணி | மொத்த மதிப்பெண்: 100

பகுதி அ

பிரிவு அ: தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதி

(5 செய்யுள் + 9 உரைநடை = 14 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:

1. உயிரினும் மேலானது எது? (1 மதிப்பெண்)
2. தேசத்தைச் சுற்றி எதை எழுப்பலாம்? (1 மதிப்பெண்)
3. (1 மதிப்பெண்)
   (அ) கண்ணி என்பதன் பொருள் என்ன?
   (அல்லது)
   (ஆ) வேதத்தின் உட்கருத்தை அறிந்தவர் யார்?
4. (1 மதிப்பெண்)
   (அ) ஓரை என்றால் என்ன?
   (அல்லது)
   (ஆ) ஆதன் யார்?
5. (1 மதிப்பெண்)
   (அ) தாண்டகம் பாடியதால் பெற்ற பெயர் யாது?
   (அல்லது)
   (ஆ) சதகம் எத்தனை பாடல்களைக் கொண்டது?

பின்வரும் பத்தியை கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்: ( வினா எண் 6 - 7)

சென்னையை அடுத்து காஞ்சிபுரம் மாவட்டம் வண்டலூரில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவைக் காண ஆர்வமுடன் சென்றோம். பெரிய இயற்கை வனப்பரப்பில் நவீன விலங்குக் காட்சியகமாக இது அமைந்துள்ளது. மின்கல ஊர்தியில் சிங்கங்கள் முதலாகப் பல்வேறு அரிய வனவிலங்குகளைக் கண்டுகளித்தோம். கீச், மூச், கீச், மூச் என்ற ஒலியுடன் திகழ்ந்த வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு அடுத்து சென்றோம். இது இந்தியாவில் உள்ள மிகப்பெரிய தண்ணீர் பறவைகள் சரணாலங்களில் சிறப்புடையதாகத் திகழ்கிறது. உலகின் பல்வேறு நாடுகிளலிருந்து ஏராளமான பறவையினங்கள் இங்குவந்து செல்கின்றன. அடுத்ததாக உலகில் உள்ள பல்வேறு அரிய வகை முதலைகளைக் கொண்ட முட்டுக்காடு முதலைப் பண்ணையைப் பார்த்தோம்.

முதலைப்பண்ணைக்கு அருகில் அமைந்துள்ள டால்.ஃபின் மீன் விளையாட்டுப் பூங்காவை பார்த்தோம். இது இந்தியாவில் உள்ள ஒரே டால்பி.ஃன் மீன் விளையாட்டு பூங்காவாகும். இம் முட்டுக்காட்டில் படகுத்துறையில் படகு சவாரி செய்து நீர் விளையாட்டுகளில் மகிழ்ந்தோம் அத்துடன் தென்னகத்தின் பாரம்பரிய கலையம்சங்களை எடுத்துக்காட்டும் மையமாகக் விளங்கும் தக்ஷீன் சித்ரா என்னும் தென்னகக் கலைபண்பாட்டு மையத்தைக் கண்டு இன்புற்றோம்.

மூவேந்தர்களால் பராமரிக்கப்பட்டுப் பெருமைக்குரிய திருக்கழுக்குன்ற வேதகிரீஸ்சுவரர் ஆலயத்தைத் தொழுது மாமல்லபுரம் சென்றோம். உலகப் புகழ்பெற்ற இச்சுற்றுலாத் தலத்தில் உள்ள கோயில்கள், சிற்பங்கள் எங்களை வியக்க வைத்தன. ஒரே கல்லினால் உருவாக்கப்பட்டுள்ள இரத வடிவ சிற்பக் கோயில்கள், பஞ்சபாண்டவர்களின் பெயர்களைத் தாங்கி, ஒவ்வொன்றும் ஒவ்வொரு கலை நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன. பொங்கும் அலைகள் தாலாட்ட கலைப்பெட்டகமாகக் கடற்கரையில் காட்சியளிக்கும் சிவன், திருமால் இக்கடற்கரைக் கோயிலில் காட்சியளிக்கின்றனர். அர்சுனன் தவம் செய்யும் காட்சியைச் சித்தரிக்கும் பாறைச் சிற்பம் மாமல்லபுரத்தின் சிறப்பாகும். குடவரைக்கோயில்கள் பாறைகளைக் குடைந்து நுட்பமிக்க வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு சரியா தவறா என கண்டறிக. (1x2 = 2 மதிப்பெண்கள்)
   (i) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வண்டலூரில் அமைந்துள்ளது.
   (ii) மதுரையில் பறவைகள் சரணாலயம் உள்ளது.
   (iii) தென்னகக் கலைபண்பாட்டு மையமாக விளங்குவது தக்ஷீன் சித்ரா.

7. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1x1= 1 மதிப்பெண்)

   அர்சுனன் தவம் செய்யும் பாறைச் சிற்பம் உள்ள இடம்
   (அ) வேடந்தாங்கல் (ஆ) வண்டலூர் (இ) முட்டுக்காடு (ஈ) மாமல்லபுரம்

8. பொருத்துக (1x4= 4 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| (அ) தொன்மையான நூல் | - | வேளாண்மை |
| (ஆ) சுழி | - | நாடி சோதனை முறை |
| (இ) சித்தர்கள் | - | தொல்காப்பியம் |
| (ஈ) உணவு உற்பத்தி | - | தமிழர்கள் |

9. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1x2=2 மதிப்பெண்கள்)
   (i) ரங்கம்மாளின் ஊரில் எத்தனை ஆண்டுகளாக மழை பொழியவில்லை.

(அ) 2 ஆண்டுகள் (ஆ) 3 ஆண்டுகள் (இ) 4 ஆண்டுகள் (ஈ) 5 ஆண்டுகள்.

(ii) கந்தன் செய்த வேலைக்குக் கிடைத்த சம்பளம்

(அ) இரண்டு ரூபாய் (ஆ) ஐந்து ரூபாய் (இ) இரண்டு ரூபாய்

(ஈ) பத்து ரூபாய்.

பிரிவு ஆ:

பின்வரும் பத்தியை கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். ( வினா எண் 10 - 11 )

கடிதம் என்ற சொல்லுக்கு எழுதிய செய்தியுள்ள காகிதம் என்று பொருள். பேச்சு வழக்கில் கடிதம் என்பது கடுதாசி என்று வழங்கப்படுகிறது, இலக்கிய வழக்கில் ஓலை, மடல், முடங்கல், பத்திரம், திருமுகம் என்ற சொற்களால் வழங்கப்படுகின்றது.

பனை, தென்னை முதலியவற்றின் ஓலைகளில் எழுதியனுப்பியதால் அதனை ஓலை என்றும் மடல் என்றும் கூறினர். எழுதியதை முடக்கி (மடக்கி) அனுப்பியதால் முடங்கல் என்றனர். இலைகளில் எழுதியதால் பத்திரம் என்றனர். அரசன், இறைவன், திருத்தொண்டர்கள். ஆசான், அமைச்சர் போன்றோர் எழுதியதைத் ‘திருமுகம்’ என்றனர். இவ்வாறு கடிதம் பற்றிய சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து கொள்ளலாம்.

சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்குத் தாழை மடலில் கடிதம் எழுதியதை நாம் இங்கு நினைவில் கொள்ளலாம். ஓப்பனைக்கலை வாயிலாகக் கடிதத் தொடர்பு கொண்டதைப் பெருங்கதை என்ற நூலின் வாயிலாக அறிய முடிகின்றது, திருவாலவாயுடையார் சேரமான் பெருமான் நாயனாருக்கு எழுதிய திருமுகம் பற்றிய செய்தி பெரியபுராணத்திலும், பதினோராம் திருமுறையிலும் காணப்படுகின்றது. தில்லைச் சிற்றம்பலவன் உமாபதி சிவத்துக்குப் பெற்றான் சாம்பான் பொருட்டு எழுதிய சீட்டுக்கவியும், ஆழ்வார் நாயன்மார் பாடிய விண்ணப்பப் பாக்களும் கடிதத் தொடர்பையே காட்டி நிற்கின்றன.

மார்க்ஸிம் கார்க்கி, நேரு, அண்ணா, கலைஞர் போன்றோரின் கடிதங்கள் குறிப்பிடத்தக்கன. பெட்ரண்ட் ரஸ்ஸல், தாகூர் போன்றோரின் கடிதங்கள் உலகப் புகழ் பெற்றவை. மு.வ. எண்ணற்ற வாழ்வியல் கடிதங்களுடன் அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு என்பன போன்ற கற்பனைக் கடிதங்களையும் எழுதியுள்ளார். இராமலிங்க அடிகளார், கவியோகி சுத்தானந்த பாரதியார் போன்றோர் எழுதிய கடிதங்களும் இங்கு நினைவு கூறத்தக்கன.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க. (3x1=3 மதிப்பெண்கள்)

i) கடிதம் என்ற சொல்லுக்கு ---------------------- என்று பொருள்.

ii) பேச்சு வழக்கில் கடிதம் என்பது ------------- என்று வழங்கப்படுகிறது,

iii) சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்குத் ------------ மடலில் கடிதம் எழுதினாள்.

iv) தம்பிக்கு கடிதம் எழுதியவர் ----------------.

11. எவையேனும் மூன்றனுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக. (3x1=3 மதிப்பெண்கள்)

i) இலைகளில் எழுதியதால்…

(அ) பத்திரம் (ஆ) மடல் (இ) கடிதம் (ஈ) கடுதாசி

ii) அரசன் எழுதியவை

(அ) கடிதம் (ஆ) மடல் (இ) திருமுகம்

(ஈ) ஓலை

iii) ஒப்பனைக்கலை கடிதத் தொடர்பை கூறுவது

(அ) சிலப்பதிகாரம் (ஆ) தொல்காப்பியர் (இ) பெருங்கதை

(ஈ) பெரியபுராணம்.

iv) விண்ணப்பப் பாக்கள்

(அ) ஆழ்வார் (ஆ) நேரு (இ) கலைஞர் (ஈ) கோவலன்.

பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 12)

ஊடகங்கள் மூலம் தான் பெருந்திரளான மக்களுக்குத் தகவல்கள் போய்ச் சேருகின்றன. எனவே இவற்றுக்கு ‘மாஸ் மீடியா’ என்று பெயர்.

ஊடகங்கள் பலவகையானவை. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், வார மாதமிருமுறை பத்திரிக்கைகள் விளம்பரங்கள் வீடியோ விளையாட்டுகள் குறுந்தகடுகள் இப்படி ஊடக வடிவங்கள் இன்று ஏராளமாகப் பெருகி விட்டன.

தகவல் தொழில் நுட்பம் மூலமே இவையனைத்தும் பெருந்திரளான மக்களைச் சென்று சேருவதால் இவற்றுக்கு மக்கள் தொடர்பியல் என்றும் சொல்வதுண்டு. இன்று நாம் வாழ்கிற உலகில் இத்தகைய பெருந்திரள் ஊடகங்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் இல்லாத அன்றாட வாழ்க்கை

ஒன்றைக் கற்பனைக் கூடச் செய்து பார்க்க முடியாது. பல நடுத்தரக் குடும்பங்களில் காலையில் மக்கள் எழுந்த உடனேயே வானொலியை இயக்கி ஒலி வடிவில் தகவல்களைப் பெறுவது. பாடல்களை உரையாடல்களைக் கேட்பது தினசரி நடைமுறையாகி விட்டது. தொலைக்காட்சிகளை இயக்கி பல்வேறு அலை வரிசைகளில் செய்திகள் திரைப்படங்கள் நெடுந்தொடர்கள் பாடல் காட்சிகள் ஆகியவற்றை ஒலி, ஒளி இரண்டும் இணைந்து வரும் காட்சி ஊடக' வடிவில் கண்டு கேட்டுச் சுவைப்பதும் தினசரி நிகழ்வு, காலையில் கண்விழித்ததுமே வீட்டு வாயிலில் கிடக்கும் செய்திதாள்கள் வார, மாத, மாதமிருமுறைப் பத்திரிக்கைகளை எடுத்து வைத்துப் படிப்பதும் அன்றாட வாழ்க்கையின் முதல் செயல்பாடாகி விட்டது. இவற்றை 'அச்சு ஊடகம்' என்கிறோம்.

ஒரு காலத்தில் மிக வசதியானவர்களின் வீடுகளில் மட்டுமே இருந்த தொலைபேசி கணினி வசதி இன்றைய உலகமயமாக்கல் சூழலில் சாதாரண மக்கள் அனைவரும் பயன்படுத்துகிற தகவல் தொடர்புச் சாதனங்களாகி விட்டன. கடைக்காரர்கள் பிளம்பர்கள் பால்காரர்கள் எலக்ட்ரீசியன்கள் தச்சர்கள் காய்கறி விற்பவர்கள் உட்பட இன்று எல்லோர் கையிலும் 'மொபைல்ஃபோன்' என்கிற செல்லிடப்பேசி இருக்கிறது. எந்த இடத்தில் என்ன வேலையில் ஒருவர் ஈடுபட்டிருந்தாலும் நினைத்த மாத்திரத்தில் அவரை வேறு யார் விரும்பினாலும் செல்லிடப்பேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிவிட முடிகிறது.

12. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு சரியா தவறா என கண்டறிக. (1x5 = 5 மதிப்பெண்கள்)

(i) ஊடகங்களுக்கு 'மாஸ் மீடியா' என்று பெயர்.

(ii) வானொலி என்பது காட்சி ஊடகமாகும்.

(iii) ஊலகமயமாக்கலால் தகவல் தொடர்புச் சாதனங்கள் சாதாரண மக்கள் அனைவரும் பயன்படுத்தும் வழி பிறந்தது.

(iv) வானொலி என்பது ஊடகத்தின் ஒரு வகை.

(v) எந்த இடத்தில் ஒருவர் இருந்தாலும் அவரை நினைத்த மாத்திரத்தில் தொலைக்காட்சியின் மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

(vi) இன்றைய நிலையிலும் வசதியானவர்கள் கையில் மட்டுமே மொபைல்ஃபோன் இருக்கிறது.

(vii) செய்தித்தாள்கள் அச்சு ஊடகமாகும்.

13. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து பொருத்துக. (1x1= 1 மதிப்பெண்)

(i) அலுவலக மேலாண்மை
(அ) வரவு செலவுகளைப் பேணுவது (ஆ) மூலப் பொருட்களை வாங்குவது (இ) விற்பனை செய்வது (ஈ) பணி நியமனம் செய்வது.

(ii) மனித வள மேலாண்மை

(அ) சம்பளம் நிர்ணயிப்பது (ஆ) கருவிகளைப் பராமரிப்பது (இ) உற்பத்தி செய்வது (ஈ) ஆவணங்களை பராமரிப்பது.

## பிரிவு இ : இலக்கணம்

14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனை எத்தகைய அன்மொழித் தொகை என்பதை கண்டறிந்து எழுதுக.

(1x1= 1 மதிப்பெண்)

(i) கூடைக்கொண்டை
(ii) சுக்கு மிளகு

15. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனை அவை எம்மொழிச் சொற்கள் என்பதை கண்டறிந்து எழுதுக. (1x3= 3 மதிப்பெண்கள்)

(i) கமலம் -
(ii) சால்வை -
(iii) அசல் -
(iv) சினிமா -

16. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு கணினிச் சொற்களுக்கு தமிழில் கலைச்சொற்களை எழுதுக. (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) Chip -
(ii) Monitor -
(iii) Network -

17. பின்வரும் வாக்கியங்களில் எவையேனும் இரண்டனுக்கு அவை பயின்று வரும் அணியினை விளக்குக. (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) போருழுந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பன போல் மறித்துதக் கைகாட்ட (சிலம்பு)
(ii) பால் நிலவு
(iii) பீலிபெய் சாகாடும் அச்சிறும்: அப்பண்டம்,
சால மிகுத்துப் பெயின்
(iv) மதி முகம்

18. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(1x1= 1 மதிப்பெண்)

(i) வினைத்தொகை என்றால் என்ன?
(ii) பின்வரும் சொற்களில் வினைத்தொகை சொல்லைக் கண்டறிக.
(அ) மலர்முகம் (ஆ) அலைகடல் (இ) ஐம்பூதம் (ஈ) மதிமுகம்.

பிரிவு ஈ

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 19 - 20 )

சிதம்பரனாருக்கு 23 வயதாகும்போது அவருடைய தந்தை திருச்செந்தூர் பிள்ளையவர்களின் மகள் வள்ளியம்மை என்பவரைத் திருமணம் செய்து வைத்தார். சிதம்பரனார் சமூக ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்தார். எல்லோரையும் சமமாகக் கருதும் மனப்பக்குவம் அவரிடமிருந்தது. தமிழின் மீது அவருக்கிருந்த ஆர்வத்தால் பலருக்கும் தமிழைக் கற்பித்தார்.

வ.உ.சிதம்பரனார் மொழியின் மீதும் நாட்டின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவர். தேச விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தத் தருணம் அது. வ.உ.சிதம்பரனார் தனது வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டார். அந்நிய துணிகளை எரித்தார். ஆங்கிலேயர்கள் இந்திய மக்களைச் சுரண்டுவதைக் கண்டார். எனவே ஆங்கிலேயரின் வணிகத்தைத் தகர்க்க எண்ணினார். 1906 ஆம் ஆண்டு சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். இதற்கு இந்திய வர்த்தகர்கள் பலரும் உதவினர்.

தமிழரின் கப்பல் அலை கடலில் சீறிப்பாய்ந்தது. சரக்கு வணிகமும், மக்கள் பயணமும் சுதேசிக் கப்பலில் நடைபெறத் தொடங்கிற்று. சிதம்பரனார் கப்பல் போக்குவரத்தோடு விவசாயம் நெசவு ஆகிய துறைகளிலும் கவனம் செலுத்தினார். இவற்றுக்கெனச் சங்கங்களை அமைத்தார். சென்னை விவசாயக் கைத் தொழிற்சங்கம், தரும நெசவு சாலை தேசியப்பண்டகச் சாலை ஆகியவை சிதம்பரனார் உருவாக்கியவை.

19. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (1x3= 3 மதிப்பெண்கள்)

(i) சிதம்பரனாருக்கு திருமணமான வயது
(அ) 20 (ஆ) 21 (இ) 23 (ஈ) 25

(ii) சிதம்பரனாரின் மனைவியின் பெயர்
(அ) கண்ணம்மா (ஆ) வள்ளியம்மை (இ) மரகதம் (ஈ) தங்கம்
(அல்லது)
வ.உ.சிதம்பரனார் எத்தொழிலைக் கைவிட்டார்
(அ) மருத்துவர் (ஆ) கணக்கர் (இ) வழக்கறிஞர் (ஈ) விவசாயம்

(iii) சுதேசி கப்பலை தொடங்கிய ஆண்டு
(அ) 1906 (ஆ) 1900 (இ) 1905 (ஈ) 1902

20. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்கவும். (1 மதிப்பெண்)

(i) சிதம்பரனார் ---------------- துணிகளை எரித்தார்.

(ii) சென்னை விவசாயக் கைத்தொழிற்சங்கம், தரும நெசவு சாலை, --------------------------- ஆகியவை சிதம்பரனார் உருவாக்கியவை.

21. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கனுக்கு சரியா தவறா என கண்டறிக. (1x4= 4 மதிப்பெண்கள்)

(i) ஐராவதீஸ்வரம் கோயில் இரண்டாம் இராசராசசோழன் காலத்தில் கட்டப்பட்டது.

(ii) சிற்பத் தொடர் காட்சிகள் 5 அங்குல உயரமுள்ளவை.

(iii) அன்னப்பறவைகள் இணைபிரியா பறவைகள்.

(iv) திருநீலகண்டா வாசித்த யாழின் பெயர் சகோடயாழ்.

(v) விமானத்தின் மேல் தளத்தில் ஐந்து நதிப் பெண்களின் உருவங்கள் உள்ளன.

(vi) கருவறையின் சிவலிங்கம் ஐராவதீஸ்வரர் என்றழைக்கப்படுகிறது.

(vii) இந்தியத் திருநாட்டின் ஐந்து புனித நதிகளும் இங்கு தெய்வங்களாகக் காட்சி தருகின்றார்.

22. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டனுக்கு விடுபட்ட இடங்களை நிரப்புக. (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) உலக நடைமுறைக்கு ஏற்றாற் போல் ஒத்து நடப்பதே ---------

(ii) இனிமை தரும் பாங்கில் நடத்தல் -----------------------

(iii) பண்பாடு இல்லாத கூரிய அறிவினர் --------------- போல்வர்.

(iv) திருவள்ளுவர் அறிவை விட ------------------ முதன்மை தந்துள்ளார்.

## பகுதி ஆ பிரிவு அ

(செய்யுள் 5+உரைநடை 6 = 11 மதிப்பெண்கள்)

23. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களில் விடையளிக்கவும். (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) வஞ்சனைப் பேய் எங்கு எங்கு உள்ளதாகப் பயப்படுவார்?

(ii) குழந்தையின் சிரிப்பை எதோடு ஒப்பிடுகிறார்?

24. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 40 முதல் 45 சொற்களில் விடையளிக்கவும். (1x3=3 மதிப்பெண்கள்)

(i) நெடுந்தாண்டத்தின் இலக்கணம் கூறுக.

(ii) நாமார்க்கும் என்ற பாடலால் நீர் அறிந்து கொண்டவை யாவை?

பின்வரும் வினாக்களுக்கு 25 முதல் 30 சொற்களில் விடையளிக்கவும்

25. இசையை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

(2 மதிப்பெண்கள்)

26. (2 மதிப்பெண்கள்)

(i) ஆடற்கலை மும்மூர்த்திகள் யார்?

(அல்லது)

(ii) தமிழர் திருநாள் என்று நடைபெறும்?

27. (2 மதிப்பெண்கள்)

(i) மயில் நடனத்தின் சிறப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ii) ஏறுதழுவுதல் என்றால் என்ன?

## பிரிவு ஆ

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 28 – 29)

பேசுதல்

மேலாண்மையியலில் பேசுதல் முக்கிய இடம் வகிக்கிறது. ஒருவர் பேசும்போது மற்றொருவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். கேட்டுக் கொண்டிருப்பவர் தனது பதில் கருத்தைத் தெரிவிப்பார். இவர்களது உரையாடல் தகவல் தருவதாகவும் இருக்கலாம். உடல் அசைவுகள் மூலம் வெளிப்படுத்துவதாகவும் இருக்கலாம்.

பேச்சுவார்த்தை, சாதாரண வாக்கிய அமைப்பு, முடிவு பெறாத கேள்விகள், அறிவுறுத்தல்கள் போன்ற வடிவிலும் இருக்கலாம். அவர்கள் பேசிக் கொள்ளும் சூழ்நிலை சாதாரணமாகவும் இருக்கலாம். அசாதாரணமாகவும் இருக்கலாம். பேசுதல் என்பது மேலாண்மைத் தொடர்பின் முக்கியு அங்கமாகும்.

கவனித்தல்

கவனித்தல் என்பது மேலாண்மையின் மேம்பாட்டுக் கூறாகும். ஒருவர் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருக்கும் நபர், பேச்சில் குறுக்கீடு செய்யாமல் கவனமாகக் கேட்டுக் கொண்ட பின்னர், தக்க பதில் கூற வேண்டும். பலர் கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால் முழுத் தகவலையும் தெரிந்து கொள்வதில்லை. சிலர் தகவல் தெரிவிப்பவரின் பாதிக் கருத்துக்கு மட்டுமே பதில் அளிக்கின்றனர். சிலர் தனக்குத் தேவையான சில விஷயங்களை மட்டும் காதில் வாங்கிக் கொள்கிறார்கள். புல தகவல்களை மனதில் கொள்ளாமலேயே இழந்து விடுகிறார்கள். தகவல் தொடர்பிலும் கவனித்தலும் உள் வாங்கிக் கொள்ளுதலும் முக்கிய அம்சமாகும்.

அசைவு

நாம் எல்லோரும் தினம் தினம் உடல் மொழியின் அசைவுகள் மூலம் பல தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருக்கிறோம். பெரும்பாலான சமயங்களில் நமக்கே அது தெரிவதில்லை. உடல் மொழி என்பதற்காக,

நாம் தனியே பயிற்சி எதுவும் செய்ய வேண்டியதில்லை. மிக இயல்பாக நம்முடைய தினசரி நடவடிக்கைகளில் இது கலந்திருக்கிறது. நாமாக முயன்றாலும் அதை மறுக்க முடியாது. தவிர்க்க முடியாது

ஒலியைப் பயன்படுத்துவது மௌனத்தைப் பயன்படுத்துவது, புன்னகைப்பது, தலையசைப்பது, இதர அங்க அசைவுகள் மூலம் தூரத்தில் இருப்பவர்களுக்குச் சைகை காட்டி தகவல் தெரிவிப்பது போன்றவை உடல் மொழியாகும். உடல் மொழியை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். அதே சமயம் தவறாகப் புரிந்து கொள்ளவும் இடமுண்டு.

28. மேலாண்மைத் தகவல் தொடர்பின் மூன்று முக்கிய கூறுகளைக் கூறுக.

(2 மதிப்பெண்கள்)

29. (i) கவனித்தல் என்றால் என்ன?

(2 மதிப்பெண்கள்)

(அல்லது)

(ii) அசைவு என்றால் என்ன?

பின்வரும் பத்தியைக் கவனத்துடன் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 30 – 32)

மேலாண்மை தகவல் தொடர்புக்கு முதன்மைக் கூறுகள்

தகவல் தொடர்புக்குச் செய்தி அனுப்புநர் மற்றும் செய்தியைப் பெறுநர் மட்டும் போதாது. அவர்கள் இருவருக்கும் இடையில் ஓர் ஊடகம் தேவை. எடுத்துக்காட்டாக இருவர் தொலைபேசியில் பேசிக் கொள்ளும்போது அவர்களுக்கு ஊடே தொடர்புச் சாதனம் இருக்கிறது. இந்த தொடர்பு சாதனம். ஊடகம், தொலைபேசி ஒரு கடிதம் கூட தொடர்பு சாதனமே. முனித உறுப்புகளும் கூட ஊடகமாகச் செயல்படுகின்றன.

அனுப்புநர்

ஒருவர் ஒரு தகவலை அனுப்புவதிலிருந்து தகவல் தொடர்பு ஆரம்பிக்கிறது. தகவல் அனுப்புநர் ஒருவர் அல்லது பலருடன் தொடர்பு கொண்டிருக்கலாம்.

பெறுநர்

ஓர் அனுப்பநர் அனுப்பிய தகவலை எவர் ஒருவர் பெற்றுக் கொள்கிறாரோ அவரே பெறுநர், எவரும் அந்தத் தகவலைப் பெற்றுக் கொள்ளவில்லை எனில் தகவல் தொடர்பு முழுமை பெறாது. ஆனால் ஒருவர் தான் வந்த செய்தியை நிராகரிக்கலாம். ஒதுக்கித் தள்ளி விடலாம். எனினும் அங்கே தகவல் தொடர்பு பூர்த்தியாகிறது. துகவலை நிராகரிப்பவர் அனுப்புநரின் செய்தியைப் பொருட்படுத்தவில்லை.

தகவல்

ஒவ்வொரு தொடர்பிலும் ஒரு தகவல் செய்தி அடங்கியுள்ளது. இதன் பொருள் வேறுபட்டதாக இருக்கக்கூழும். ஆந்தத் தகவல் காதால் கேட்க முடியாததாகவும் குறைபாடு உள்ளதாகவும் இருக்கலாம். தகவல்கள் பலவாறாகவும் சிக்கல் மிகுந்ததாகவும் இருப்பதுமுண்டு.

ஊடகம்

எல்லாத் தொடர்புகளுமே ஓர் ஊடகத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது. இதில் முதன்மையான ஊடகம் மனித உடல்தான். பயன்படுகிற ஊடகங்கள் பலவாகவும், சிக்கல் மிகுந்ததாகவும் இருக்கக்கூடும்.

பதில் தொடர்பு

மனிதர்கள் அனைவரும் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும்போது தகவலை அனுப்பும்போது பெறுபவர்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கின்றனர். தகவல் தொடர்பில் சிறந்து விளங்கும் நபர் செய்தி பெறுபவரிடமிருந்து மிகவும் புலப்படும்படியான, உடனடியான ஒரு பதிலைப் பெறும்போது அவர் தகவல் தொடர்பில் சிறப்பாகச் செயல்பட்டிருப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இந்த தொடர்பு நேர்மறையாகவும் இருக்கலாம். எதிர்மறையாகவும் இருக்கலாம். மேலாண்மைத் தொடர்பில் பதில் தொடர்பு தெளிவாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும்.

30. (i) மேலாண்மைத் தகவல் தொடர்பில் ஊடகம் குறித்து எழுதுக.
(2 மதிப்பெண்கள்)

(அல்லது)

(ii) மேலாண்மைத் தகவல் தொடர்பில் அனுப்புநர் குறித்து எழுதுக.

31. பதில் தொடர்பு என்றால் என்ன?
(2 மதிப்பெண்)

32. கடித வகைகளில் இரண்டினைச் சுட்டுக.
(2 மதிப்பெண்)

33. தமிழ் உலகச் செம்மொழி குறித்து கட்டுரை வரைக.
(1x3= 3 மதிப்பெண்கள்)

## பிரிவு இ : இலக்கணம்

34. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.
(1x2= 2 மதிப்பெண்கள்)

(i) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான இடங்கள், வாய்ப்புகள்.
(அ) சந்தை (ஆ) கருவிகள் (இ) தொழில்நுட்பம் (ஈ) அலுவலகம்.

(ii) ஒரு நிறுவனம் செயல்படுவதற்குத் தேவையான நபர்கள்

(அ) மனிதவளம் (ஆ) போட்டி (இ) இலாபம் (ஈ) அலுவலகம்

35. பின்வருவனவற்றிற்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(1x2=2 மதிப்பெண்கள்)

(i) ‘தருமம்’ என்பது ------------------ மொழிச் சொல்.
(அ) வடமொழி (ஆ) பாரசீகம் (இ) உருது (ஈ) அரபு

(ii) ‘ஓட்டல்’ என்பது ------------------- மொழிச் சொல்.
(அ) வடமொழி (ஆ) பாரசீகம் (இ) உருது (ஈ) ஆங்கிலம்

36. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(1x2= 2 மதிப்பெண்கள்)

(i) பிறிது மொழிதல் அணி என்றால் என்ன?

(ii) தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?

## பிரிவு ஈ

37. பின்வரும் வினாவிற்கு விளக்கமாக விடையளிக்கவும்.

(3x1=3மதிப்பெண்கள்)

(i) தமிழ்ப் பண்பாட்டு வளங்களை எவை எவற்றின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

38. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(2x1= 2 மதிப்பெண்கள்)

(i) தொலைதூர கல்வியில் சேர்வதற்கான விண்ணப்ப கடிதம் ஒன்று எழுதுக.

(ii) அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு விண்ணப்பம் அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதுக.

39. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(1x5= 5 மதிப்பெண்கள்)

(i) ‘உற்றுழி உதவியும்… என்ற பாடல்வழி கல்வியின் சிறப்பு குறித்து விளக்கி எழுதுக.

(ii) ‘உண்டால் அம்ம, இவ்வுலகம்’ என்ற பாடலின் கருத்தினை விளக்குக.

## பகுதி இ - பிரிவு உ

40. பின்வருவனவற்றுள் விடுபட்ட இடத்தைப் பூர்த்தி செய்க.

(1x2= 2 மதிப்பெண்கள்)

(i) தமிழில் --------------- குறிக்கும் எண்ணுருவிலிருந்து சுழி பிறந்தது.

(ii) பண்டைத் தமிழர் உணவையே மருந்தாகக் கொண்டு ---------- வாழ்வை வாழ்ந்தனர்.

(அல்லது)

(iii) வேம்பின் பயன்பாட்டைத் தமிழர்கள் அறிந்து -------- ஆண்டுகள் ஆகிறது.

41.

(1 மதிப்பெண்)

(i) ஒரு நிறுவனத்தின் உயிர்நாடியான துறை
(அ) நிதித்துறை (ஆ) விளம்பரத் துறை (இ) விற்பனைத் துறை (ஈ) உற்பத்தித் துறை

(அல்லது)

(ii) நிறுவன மேலாண்மைக்குத் தேவையான திறன்

(அ) முடிவெடுக்கும் திறன் (ஆ) பல மொழி அறிவு (இ) பேச்சு திறன் (ஈ) அதிகாரம் செய்யும் திறன்.

42. பின்வருவனவற்றுள் சரியான விடையைக் கண்டறிந்து பொருத்துக.

(1x2=2 மதிப்பெண்கள்)

(i) பாரதி பிறந்த இடம்
(அ) சென்னை (ஆ) மதுரை (இ) எட்டயபுரம் (ஈ) வேலூர்

(ii) குண்டு போட்டு எதைப் பறிப்பர்?
(அ) பணம் (ஆ) உணவு (இ) உடை (ஈ) உயிர்

43. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 20 முதல் 25 சொற்களுள் விடையளிக்க. (1x2= 2 மதிப்பெண்கள்)

(i) கோப்பெருந்தேவி கண்ட தீக்கனாவை விளக்குக.

(ii) கண்ணகியின் தோற்றம் பற்றி வாயிற்காவலன் பாண்டியனிடம் கூறியவற்றை விவரிக்க.

44. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.

(1x4= 4 மதிப்பெண்கள்)

(i) சிற்றிலக்கியங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ii) தமிழ்விடு தூது உரைக்கும் சிவபெருமான் சிறப்புகளை எடுத்துரைக்க.

45. கண்ணகியின் வழக்காடு திறத்தைப் விவரிக்க. (1x4=4மதிப்பெண்கள்)

---

# மேல்நிலைக் கல்வித் தேர்வு விடைத்தாள்
# தமிழ் (304)

1. தாய்நாடு
2. நெடுஞ்சுவர்
3.
   (அ) இரண்டு அடிகளைக் கொண்ட இசைப்பாடல்.
   (அல்லது)
   (ஆ) இறைவன்.

4.
   (அ) ஓரை என்பது மகளிர் விளையாடல்களுள் ஒன்று.
   (அல்லது)
   (ஆ) ஆதன் என்பவன் சேரமன்னன்.

5.
   (அ) தாண்டகச் சதுரர்
   (அல்லது)
   (ஆ) 100 பாடல்கள்.

6.
   (i) சரி
   (ii) தவறு
   (iii) சரி

7. மாமல்லபுரம்

8.

| | | |
|---|---|---|
| (அ) தொன்மையான நூல் | - | தொல்காப்பியம் |
| (ஆ) சுழி | - | தமிழர்கள் |
| (இ) சித்தர்கள் | - | நாடி சோதனை முறை |
| (ஈ) உணவு உற்பத்தி | - | வேளாண்மை |

9.

(i) 3 ஆண்டுகள்

(ii) ஐந்து ரூபாய்

10.

i) எழுதிய செய்தியுள்ள காகிதம்

ii) கடுதாசி

iii) தாழை

iv) மு.வ.

11.

i) பத்திரம்

ii) திருமுகம்

iii) பெருங்கதை

iv) ஆழ்வார்

12.

(i) சரி

(ii) தவறு

(iii) சரி

(iv) சரி

(v) தவறு

(vi) தவறு

(vii) சரி

13.

(i) வரவு செலவுகளைப் பேணுவது

(ii) சம்பளம் நிர்ணயிப்பது

14.

(i) உவமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

(ii) உம்மைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

15.

(i) வடமொழிச் சொல்

(ii) பாரசீகச் சொல்

(iii) உருதுச் சொல்

(iv) ஆங்கிலச் சொல்

16.

(i) சில்லு

(ii) கணினித் திரை
(iii) வலையகம்

17.
(i) தற்குறிப்பேற்ற அணி
(ii) எடுத்துக்காட்டு உவமை அணி
(iii) பிறிது மொழிதல் அணி
(iv) எடுத்துக்காட்டு உவமை அணி

18.
(i) காலத்தைக் குறிக்கும் வினை உருபுகள் மறைந்து வருவது.
(ii) அலைகடல்

19.
(i) 23
(ii) வள்ளியம்மை
(அல்லது)
வழக்கறிஞர்
(iii) 1906

20.
(i) அந்நிய
(ii) தேசிய பண்டகச் சாலை

21.
(i) சரி
(ii) தவறு
(iii) தவறு
(iv) சரி
(v) தவறு
(vi) சரி
(vii) தவறு

22.
(i) பண்பாடு.
(ii) நயன்
(iii) மரம் போல்வர்
(iv) பண்பாடு

23.
(i) மரம், குளம், முகடு.
(ii) முல்லை மலர்.

24.
(i) ஒவ்வொரு அடியிலும் எட்டு சீர்கள் வரின் நெடுந்தாண்டகம்.

(ii) நாவுக்கரசர் அமைச்சர்களிடம் நான் யாருக்கும் அடிமையில்லை என்றும் எமனுக்கும் அஞ்சமாட்டேன் - யாருக்கும் தீங்கு செய்யவில்லை - மகிழ்ச்சியின்றி துன்பமில்லை - யாருக்கும் ஆட்படாத சிவனைத் தவிர யாருக்கும் அடிமைபட்டு வாழாதவர் என்கிறார்.

25. இசையை 2 வகையாகப் பிரிக்கலாம்.

26.

(i) திருவாரூர் ஞானம், தஞ்சாவூர் பாலசரசுவதி, மதுராந்தகம் ஜெகதாம்பாள்.

(அல்லது)

(ii) தை மாதம் முதல்நாள்.

27.

(i) மயில் தேசியப் பறவை, முருக வழிபாட்டிற்குரிய பறவை.

(அல்லது)

(ii) காளையை இளைஞர்கள் அடக்குவது.

28. பேசுதல், கவனித்தல், அசைவு.

29. (i) ஒருவர் பேசுவதை முழுமையாகக் கேட்டு பதில் கூறுதல்.

(அல்லது)

(iii) உடல் மொழியின் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல்.

30. (i) எல்லாத் தொடர்புகளுமே ஓர் ஊடகத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது. இதில் முதன்மையான ஊடகம் மனித உடல்தான். ஊடகங்கள் பலவாகவும் சிக்கல் மிகுந்ததாகவும் இருக்கக்கூடும்.

(அல்லது)

(ii) ஒருவர் ஒரு தகவலை அனுப்புவதிலிருந்து தகவல் தொடர்பு ஆரம்பிக்கிறது. தகவல் அனுப்புநர் ஒருவர் அல்லது பலருடன் தொடர்பு கொண்டிருக்கலாம்.

31. மனிதர்கள் அனைவரும் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும்போது தகவலை அனுப்பும்போது பெறுபவர்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கின்றனர். தகவல் தொடர்பில் சிறந்து விளங்கும் நபர் செய்தி பெறுபவரிடமிருந்து மிகவும் புலப்படும்படியான, உடனடியான ஒரு பதிலைப் பெறும்போது அவர் தகவல் தொடர்பில் சிறப்பாகச் செயல்பட்டிருப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இந்த தொடர்பு நேர்மறையாகவும் இருக்கலாம். எதிர்மறையாகவும் இருக்கலாம். மேலாண்மைத் தொடர்பில் பதில் தொடர்பு தெளிவாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும்.

32. 1. உறவினர் கடிதம் 2. அலுவலக கடிதம்.

33. தொன்மை - தனித்தன்மை - பொதுமைப்பண்பு - நடுநிலை - பலமொழிகளுக்குத் தாய் போன்றவை.

34.

(i) சந்தை

(ii) மனிதவளம்

35.

(i) வடமொழி

(ii) ஆங்கிலம்

36.

(i) ஒன்றைக்கூற வந்த புலவர் அதனை நேரடியாகக் கூறாமல் வேறொன்றினைக் கூறி அதன் மூலம் தான் கூற வந்த கருத்தைத உணர வைப்பர்.

(ii) இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது.

37.

(i) இலக்கியங்கள் - மானிடவியலார் - சமூகவியலார் - நயன், நட்பு, நாணம், பயன், பண்பு, இசை, ஆடல், ஓவியம், சிற்பம் போன்றவை.

38.

(i) அனுப்புநர் - பெறுநர் - மதிப்பிற்குரிய ஐயா பொருள் - போன்றவை.

(ii) அனுப்புநர் - பெறுநர் - மதிப்பிற்குரிய ஐயா பொருள் - போன்றவை.

39.

(i) கல்வியாளனையே சமுதாயம் மதிக்கும் - கல்வி கற்றவனையே தாய் விரும்புவாள் - கல்வியறிவுடையவன் நால்வருணத்துள் எதிலிருந்தாலும் அவன் காட்டும் நெறிப்படிதான் ஒழுகுவர் போன்றவை.

(ii) அமிழ்தமே என்றாலும் தனித்து உண்டலும் இலர் - யாரோடு வெறுப்பிலர் - துன்பத்திற்கு அஞ்சி சோம்பியிருத்தல் இலர் - புகழுக்காக உயிரையும் கொடுப்பர் - பழியெனில் உலகமே கிடைத்தாலும் கொள்ளார் - மனக்கவலை இல்லார் - தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் சான்றோர் உளராதலால் இவ்வுலகம் இருக்கின்றது.

40.

(i) பத்து

(ii) நோயற்ற

(அல்லது)

(iii) இரண்டாயிரம்

41.

(i) நிதித்துறை

(அல்லது)

(ii) முடிவெடுக்கும் திறன்

42.

(i) எட்டயபுரம்

(ii) உயிர்

43.

(i) மன்னனுடைய வெண்கொற்றக் குடையோடு செங்கோலும் கீழே விழுதல், ஆராய்ச்சி மணி ஒலித்தல், எட்டுத்திசை அதிரவும், சூரியனை இருள் மறைக்கவும் இரவில் வானவில் தோன்றுதல், நண்பகலில் விண்மீன்கள் எரிந்து கீழே விழுதல்.

(ii) கொற்றவை - பிடாரி - பத்ரகாளி - காளி - துர்க்கை - பழிவாங்கும் நோக்குடன் சினம் கொண்டு கணவனை இழந்தவள் என கண்ணகியின் தோற்றம் குறித்து கூறினாள்.

44.

(i) நாயக்கர் ஆட்சி - பிரபந்தம் - நன்கு கட்டப்பட்டது - 96 வகை - அந்தாதி, பிள்ளைத் தமிழ், பரணி, கலம்பகம், கோவை, உலா, மாலை, தூது, பள்ளு, குறவஞ்சி போன்றவை.

(அல்லது)

(ii) சிவபெருமான் 49 சங்கப் புலவர்களுள் ஒருவராக இருந்தார். சுந்தரர் முதலையுண்ட பிள்ளையைப்பின் ஈன்று தரச்சொல்லி பாட சிவபெருமான் அருளியமை - தாழம்பு பிரமனுக்குச் சான்றாக பொய் கூறியதால் அதனை தாழம்பூவை முடியிற் புனையாது விடுத்தல் - சிவபெருமான் மணிவாசகரிடம் பாவை பாடிய வாயால் கோவை பாடுக எனல் போன்றவை.

45. கண்ணகி பாண்டியனிடம் தன் சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது எனல் - பாண்டியன் தன்னுடையது முத்துப் பரல்கள் எனல் - கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பினை கொண்டு வரச் செய்தல் -

கண்ணகி அச்சிலம்பினை மன்னன் முன்னிலையில் உடைத்தாள். ஆதில் இருந்து மாணிக்கப்பரல்களுள் ஒன்று அரசனுடைய வாயில் பட்டுத் தெறித்தது.

---------------------------------------------------------------------------------------------------------------------